பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**24 03 2026** **TUESDAY** **6.30 PM**

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1.** மேற்காசிய போர் சூழல் காரணமாக ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்புகளை எதிர்கொள்வதற்கான திட்டம் செயல்படுத்தப்படும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் மாநிலங்களின் எல்லைப்பகுதிகள் தீவிரமாக கண்காணிக்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

**3.** அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா குளிர்பதன பெட்டி, மீன்பிடி தடைகால நிவாரணத்தை 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்துவது உள்ளிட்ட அறிவிப்புகளுடன் அஇஅதிமுக-வின் தேர்தல் அறிக்கை இன்று வெளியிடப்பட்டது.

**4.** மாநிலங்களின் தொகுதி மறுவரையறை, தொகுதி எண்ணிக்கை உயர்வு உள்ளிட்டவை குறித்து விவாதிக்க நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரை கூட்ட வேண்டும் என்று திமுக வலியுறுத்தியுள்ளது.

**5.** 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

---- இனி விரிவான செய்திகள் —

<<<<<<<>>>>>>>

மேற்காசிய போர் சூழல் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை எதிர்கொள்வதற்கான திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

மேற்காசிய நாடுகளில் நிலவும் அசாதாரண சூழ்நிலை குறித்து இன்று மாநிலங்களவையில் உரையாற்றிய பிரதமர், நாட்டின் பொருளாதார கட்டமைப்பு வலுவாக உள்ளது என்றும், போர் சூழலால் மாறிவரும் சூழ்நிலைகளை அரசு உன்னிப்பாக கவனித்து வருகிறது என்றும் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கு தேவையான உரம் தடையின்றி கிடைப்பதற்கு தேவையான முன்னேற்பாடுகளை அரசு செய்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மேற்காசிய சூழலால் உரம் இறக்குமதி செய்வதில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ள போதிலும், விவசாயிகளுக்கு உரங்கள் கிடைப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

நெருக்கடியான இத்தருணத்தில் மத்திய அரசு மேற்கொள்ளும் சீர்திருத்த நடவடிக்கைகளை விரைந்து செயல்படுத்த மாநில அரசுகள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

விவசாயிகள், ஏழை எளிய மக்கள் மற்றும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தில் தடையின்றி உணவுப் பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

உணவுப் பொருள் பதுக்கலை தடுக்க உயர் முன்னுரிமை அடிப்படையில் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதற்கு சிறப்பு ஏற்பாடுகளை மாநிலங்கள் செய்துதர வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கோவிட் பெருந்தொற்று காலத்தில் மாநில அரசுகள் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகத்தில் ஒத்துழைப்பு அளித்தது போலவே தற்போதும் செயல்பட வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மேற்காசியாவில் மோதல்கள் தொடரும் பட்சத்தில் உலகப் பொருளாதாரம் மேலும் பாதிப்புக்கு உள்ளாகும் என்பதை கருத்தில்கொண்டு செயல்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மேற்காசிய நாடுகள் பிரச்சினையில் ஏற்பட்டுள்ள தாக்கத்திற்கு நீண்டகால, நடுத்தர மற்றும் குறுகிய கால நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறும் மாநிலங்களில் நேர்மையாகவும், சுதந்திரமாகவும் வாக்குப்பதிவை மேற்கொள்ளும் வகையில், எல்லைப்பகுதிகள் கண்காணிக்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

புதுதில்லியில் இன்று தலைமை தேர்தல் ஆணையர் திரு **Gyanesh Kumar** தலைமையில் தமிழகம், கேரளம் உள்ளிட்ட ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர்தல் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

இதில், தேர்தல் ஆணையர்கள் டாக்டர் சாந்து, டாக்டர் விவேக் ஜோஷி ஆகியோரும் பங்கேற்றனர்.

தேர்தல் முன்னேற்பாடுகள், சட்டம் — ஒழுங்கு நிலைமை ஆகியவை குறித் அவர்கள் விரிவாக விவாதித்தனர்.

சட்ட விரோத பணப்புழக்கம், மது போதைப்பொருட்கள், ஆயுதங்கள் கட்டுப்பாடு குறித்தும் அவர்கள் ஆய்வு மேற்கொண்டனர்.

சோதனைச் சாவடிகளில் கட்டுப்பாடு, பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் விநியோகத்தை தடுப்பது உள்ளிட்டவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தேர்தலின்போது வன்முறை நிகழாமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

மத்திய நேரடி வருவாய் வாரியம், அமலாக்கப்பிரிவினர் உள்ளிட்டோரின் துணை கொண்டு சோதனை மேற்கொள்வது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

<<<<<<>>>>>>>

வரும் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான அஇஅதிமுக-வின் தேர்தல் அறிக்கையை அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி இன்று வெளியிட்டார்.

சென்னையில் இன்று ஏற்கனவே வெளியிட்ட சில அறிவிப்புகளுடன் புதிய அறிவிப்புகளையும் இணைத்து தேர்தல் அறிக்கையை அவர் வெளியிட்டு பேசினார்.

வங்கிகளில் கல்விக்கடன் பெற்று வேலைவாய்ப்பு கிடைக்காமல் உள்ளவர்களின் கல்விக்கடன் தொகையை அரசே ஏற்பதற்கு தங்கள் கட்சி நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் கூறினார்.

மீன்பிடி தடைகால நிவாரணம் 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்றும் என்றும் அவர் தெரிவித்தார்.

தைப்பொங்கலன்று பொங்கல் தொகுப்புடன் ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும், கைத்தறி நெசவாளர்களுக்கு 450 யூனிட் வரையிலும், விசைத்தறி நெசவாளர்களுக்கு ஆயிரத்து 400 யூனிட் வரையிலும் விலையில்லா மின்சாரம் வழங்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு விலையில்லா குளிர்பதன பெட்டி வழங்கப்படும் என்றும், விலையில்லா அரிசியோடு ஒரு கிலோ பருப்பு, ஒரு லிட்டர் சமையல் எண்ணெய் ஆகியவையும் இலவசமாக வழங்கப்படும் என்றும் திரு எடப்பாடி பழனிசாமி அறிவித்தார்.

<<<<<<>>>>>>>

மாநிலங்களின் தற்போதைய தொகுதி அளவு எந்த நிலையிலும் மாற்றப்படக்கூடாது என்ற நிலைப்பாட்டில் திமுக உள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், 2026 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையிலேயே நாடாளுமன்றத்திலும், மாநில சட்டப்பேரவைகளிலும் மகளிருக்கு

இடஒதுக்கீட்டை அளிப்பது என்ற நிலைப்பாட்டில் இருந்து மத்திய அரசு மாறியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தற்போது 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் மகளிருக்கு இடஒதுக்கீடு வழங்குவதற்கு மத்திய அரசு முயற்சி மேற்கொள்வதாக கூறியுள்ளார்.

நான்கு பெரிய மாநிலங்களில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைமுறைகள் அமலில் உள்ள நிலையில், இதுபோன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களில் நியாயமான தொகுதி மறுவரையறை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தங்களது கட்சி தொடர்ந்து வலியுறுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

வரும் ஜூன் மாத்தில் நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொரை கூட்டி தொகுதி மறுவரையறை தொகுதி எண்ணிக்கை உயர்வு, தற்போதுள்ள விகிதாச்சார அளவிலேயே மாநிலங்களின் தொகுதி அளவு உள்ளிட்டவற்றை உறுதி செய்து அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<<>>>>>>>

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, மாநிலம் முழுவதும் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தஞ்சாவூரில் இதுவரை சுமார் 64 லட்சம் ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும், விதிமீறல் தொடர்பாக 72 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மாவட்ட தேர்தல் அலுவலர் திருமதி பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

*(Sound Byte — பிரியங்கா பங்கஜம் — 38 Sec. )*

<<<<<<<>>>>>>>

தூத்துக்குடியில் ஓட்டு போட்டு வழியை காட்டு என்ற தலைப்பில் வ உ சி கல்வியியல் கல்லூரியில் மாணவ, மாணவியர் சுமார் 2 மணிநேரத்தில் 55 அடி நீளம் கார்டூன் வரைந்து தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இதில் கலந்துகொண்ட மாணவ, மாணவியர் வாக்களிப்பதன் அவசியம் குறித்து விளக்கினர்.

*(Sound Byte — மாணவர்கள் — 40 Sec. )*

<<<<<<<>>>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, மாணவ, மாணவியருக்கான தேர்தல் சிறப்பு போட்டிகளை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

பங்கேற்க விரும்பும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் **sveeptvlr.in** என்ற இணைய முகவரி வாயிலாக பங்கேற்கலாம் என்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு பிரதாப் தெரிவித்துள்ளார்.

---------------

செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் பையனூர் தனியார் கல்லூரியில், ஆட்சியர் திருமதி மாலதி ஹேலன் தலைமையில் அனைவரும் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாணவ, மாணவியர் **VOTE 100** என்ற வார்த்தைகளில் நின்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

---------------

மயிலாடுதுறை மாவட்டத்தில் **100** சதவீத வாக்களிப்பை வலியுறுத்தி ஆட்சியர் திரு ஹெச் எஸ் ஸ்ரீகாந்த் தலைமையில் பேருந்து மற்றும் வாகனங்களில் ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

-----------------

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி, மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் எம் எஸ் பிரசாந்த் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.**

**<<<<<<<<END>>>>>>>>**